

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 56 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 19 – செவ்வாய்க்கிழமை 06 அக்டோபர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 56 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 19 - Tuesday 06 October 2026 - Dak 8 Pages ₹ 5.00

வரலாற்றில் இல்லாத அளவிற்கு

வள்ளலாரைச் சிறப்பித்தது திராவிட மாடல் அரசு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 6 -

தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு வள்ளலாரை பல்வேறு வகையில் போற்றிச் சிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு என்று தமது சமூக வலைதளப் பக்கத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வள்ளலார் பிறந்த நாளை யொட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தனிப்பெரும் கருணை நாள்: சாதி, சமயம், சடங்குகளைக் கடந்து அனைத்து உயிர்களையும் ஒன்றாகக் கருதிய வள்ளலார் பிறந்தநாள்

தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு:

வள்ளலாரின் உயரிய கருத்துகள் உலகெலாம் சென்றடைய அனைத்துலக வள்ளலார் மாநாடு,

அம்மாநாட்டில் 8 புதிய அறிவிப்புகள்,

வள்ளலார் முப்பெரும் விழா,

வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு,

திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் பெயரைச் சூட்டியது என வள்ளலாரைப்



போற்றிச் சிறப்பித்தது நமது #DravidianModel அரசு.

வள்ளலார் ஏற்றிய அணையா விளக்கைப் போல அவர் வலியுறுத்திய சமூகநீதி, சமத்துவ மற்றும் மூடநம்பிக்கை எதிர்ப்புக் கருத்துகளும் சுடர்விட்டு மக்கள் மனங்களில் எரிய வேண்டும்! மதமென்னும் பேய் நம்மைப் பிடியாதிருக்க வேண்டும்!

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

ஜெம் வீரமணி விவகாரத்தில் அவதூறு:

அமைச்சர்கள் நிர்மல் குமார், ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிராக வழக்குத் தொடர தி.மு.கழகத்திற்கு அனுமதி!

சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, அக். 6 -

த.வெ.க. அமைச்சர்கள் நிர்மல் குமார், ஆதவ் அர்ஜூனா மற்றும் த.வெ.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு எதிராக வழக்கு தொடர தி.மு.க.வுக்கு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ரூ.1.01 கோடி மானநஷ்டஈடு கோரி வழக்கு தொடர தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கு அனுமதி அளிக்க உத்தரவிடப் பட்டுள்ளது.

போக்சோ வழக்கில் கைதான வீரமணி வழக்கில் தங்களை இணைத்து பேசிய அமைச்சர்கள் நிர்மல்குமார், ஆதவ் அர்ஜூனா மற்றும் த.வெ.க. தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு எதிராக அவதூறு தாக்கல் செய்ய தி.மு.க.விற்கு அனுமதி அளித்து சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக ஜெம் கிரானைட் உரிமையாளர் வீரமணிக்கு எதிரான வழக்கில், உரிய நடவடிக்கை எடுக்காமல் முந்தைய தி.மு.க. அரசு தப்பிக்க விட்டுவிட்டதாக த.வெ.க.வைச் சேர்ந்த தமிழக அமைச்சர்கள் சி.டி.ஆர்.நிர்மல் குமார் மற்றும் ஆதவ் அர்ஜூனா ஆகியோர் பேட்டி அளித்திருந்தனர். அதேபோல, த.வெ.க. ஐ.டி. விங்கும், தி.மு.க. அரசுக்கு எதிராக குற்றம்சாட்டி எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டு இருந்தது.

இது தி.மு.க.வுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக கூறி, ஜெம் வீரமணிக்கு எதிரான வழக்கில் தி.மு.க. அரசு மீது குற்றம்சாட்டி கருத்துக்களை தெரிவிக்க அமைச்சர்கள் நிர்மல்குமார், ஆதவ் அர்ஜூனா மற்றும் த.வெ.க. ஐ.டி. விங் ஆகியோருக்கு தடை விதிக்கக் கோரி, தி.மு.க. சார்பில் அதன் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் மான நஷ்ட ஈடு வழங்கும்படி அமைச்சர்கள் நிர்மல்குமார், ஆதவ் அர்ஜூனா மற்றும் த.வெ.க. தொழில்நுட்ப பிரிவுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

ஜெம் வீரமணிக்கு எதிராக 2025ஆம் ஆண்டு அக்டோபர் 6ஆம் தேதி புகார் வந்தநிலையில், மறுநாளே வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், எந்த தலையிடும் இல்லாமல், எந்த தாமதமும் செய்யப்படாமல் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் மனுவில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

உண்மை நிலைக்கு மாறாக தி.மு.க.வுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சியின் ஐ.டி. பிரிவு அவதூறு கருத்துக்களை பரப்பி வருவதாகவும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், இந்த விவகாரம் தொடர்பாக தி.மு.க. மீது குற்றம்சாட்டி அமைச்சர்கள் மற்றும் த.வெ.க. தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் வெளியிடப்பட்ட பதிவுகள் மற்றும் வீடியோக்களை நீக்க வேண்டும் என சமூக வலைதள நிறுவனங்களுக்கு உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கோவிந்தராஜன் திலகவதி முன் விசாரணைக்கு வந்தபோது, அமைச்சர்கள் தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், அமைச்சர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென்றால் முன் கூட்டியே நோட்டீஸ் வழங்கியிருக்க வேண்டுமெனவும், அவ்வாறு நோட்டீஸ் வழங்காமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல என வாதிட்டார்.

அப்போது, தி.மு.க. சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், அமைச்சர்கள் என்ற முறையில் அல்லாமல் தனி நபர்கள் என்ற முறையிலேயே அமைச்சர்கள் இருவரும் வழக்கில் இணைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்ததை அடுத்து, மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதி தள்ளிவைத்திருந்தார்.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதி, கோவிந்தராஜன் திலகவதி, போக்சோ வழக்கில் கைதான வீரமணி வழக்கில் தங்களை இணைத்து பேசிய அமைச்சர்கள் நிர்மல்குமார், ஆதவ் அர்ஜூனா மற்றும் த.வெ.க. தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு எதிராக அவதூறு வழக்குத் தாக்கல் செய்ய தி.மு.க.விற்கு அனுமதி அளித்து உத்தரவிட்டார்.

மதுராந்தகம் – தாராபுரம் தொகுதி

இடைத்தேர்தலில் இன்று வாக்குப்பதிவு!

சென்னை, அக். 6 -

மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் த.வெ.க.வின் குதிரை பேரத்தால் அத்தொகுதி மக்கள் மீது இடைத்தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தொகுதிகளிலும் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் போட்டியிடுகின்றன. தி.மு.க. சார்பில் மதுராந்தகத்தில் இ.பரந்தாமனும், தாராபுரத்தில் எஸ். சுகன்யாவும் போட்டியிடுகின்றனர். இரண்டு தொகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைந்தது.

இந்நிலையில், இந்த இரண்டு தொகுதிகளிலும் இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ஓட்டுப்பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கப்படும். வருகிற 9ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இடைத்தேர்தலை யொட்டி 2 தொகுதிகள் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

தட்டாஞ்சாவடி தொகுதி!

இதேபோல், புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை 9ஆம் தேதி நடைபெற உள்ளது.

த.வெ.க. அரசுக்கு போதிய பெரும்பான்மை இல்லாததால் குதிரைபேரம் நடத்துகிறது!

ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் முதலமைச்சர் விஜய்!

அண்ணா அறிவாலயத்தில் இ.பரந்தாமன் செய்தியாளர்களுக்குப் பேட்டி!

சென்னை, அக். 6 -

த.வெ.க. அரசுக்கு போதிய பெரும்பான்மை இல்லாததால், முதலமைச்சர் விஜய் குதிரை பேரம் நடத்தி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார் என பரந்தாமன் குற்றம்சாட்டியுள்ளார். எம்.எல்.ஏ.க்களிடம் குதிரைபேரம் நடத்திய விவகாரத்தில் விஜயை A1 குற்றவாளியாக சேர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

4 கால்களும் ஊழல் கால்கள்தான்!

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும், மதுராந்தகம் தொகுதி தி.மு.க. வேட்பாளருமான பரந்தாமன், சென்னை அண்ணா அறிவாலயத்தில்



செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், த.வெ.க. அரசுக்கு போதிய பெரும்பான்மை இல்லாததால், முதலமைச்சர் விஜய் குதிரை பேரம் நடத்தி எம்.எல்.ஏ.க்களை Purchase செய்து கொண்டிருக்கிறார் என குற்றம்சாட்டியுள்ளார்.

முதலமைச்சர் விஜய் குதிரை பேரம் நடத்தியதை வைகோவே ஒப்புக்கொண்டுள்ளதை சுட்டிக் காட்டிய பரந்தாமன், விஜய் அமர்ந்துள்ள முதலமைச்சர் நாற்காலியின் 4 கால்களும் ஊழல் கால்கள்தான் என விமர்சித்தார். முதலமைச்சர் விஜய் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி வருகிறார் என்றும் பரந்தாமன் சாடினார்.

தொடர்ந்து பேசிய பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.மு.ராஜேந்திரன், செந்தில் செல்வன் ஆகியோர் ராஜினாமா செய்தால், இடைத்தேர்தலில் மீண்டும் வாய்ப்பளித்து அமைச்சராக்குகிறேன் என விஜய் குதிரைபேரம் நடத்தியுள்ளதாக குற்றம்சாட்டினார்.

முதல்வர் விஜய் A1 குற்றவாளி!

விஜய், ஆதவ் அர்ஜூனா, வைகோ, துரை வைகோ ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி லஞ்ச ஒழிப்புத்துறையில் இருவரும் புகார் அளித்துள்ளதை சுட்டிக்காட்டிய பரந்தாமன், புகார் மீது லஞ்ச ஒழிப்புத்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என வினவினார்.

எம்.எல்.ஏ.க்களிடம் குதிரைபேரம் நடத்திய விவகாரத்தில் விஜயை A1 குற்றவாளியாக சேர்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள பரந்தாமன், த.வெ.க. மீதான குதிரைபேர புகார் குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தி.மு.க. சட்ட ரீதியாக போராடும் என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும்

தூய்மைப் பணியாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்!

தனியார் மயத்தை கைவிட்டு – பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தல்!

சென்னை, அக். 6 –

தனியார் மயத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நெல்லை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் தூய்மைப் பணியாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

மாநகராட்சி, நகராட்சி, மற்றும் பேரூராட்சிகளில் பணி செய்யும் தூய்மைப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும், தினசரி சம்பளத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நெல்லை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சங்க தலைவர் மோகன் தலைமையில், மாநகராட்சி அலுவலக வளாகத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். போராட்டத்தால் நெல்லை மாநகராட்சி பகுதியில் தூய்மைப் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

மதுரை

மதுரை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காலை முதலே காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர். பணியாளர்களுக்கு கொடுக்கப்படும் காலை உணவு தரமானதாக இல்லை, கோரிக்கைகளை அரசு அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை என அடுக்கடுக்காக குற்றம் சாட்டுகின்றனர்.

கள்ளக்குறிச்சி - உளுந்தூர் பேட்டை

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டன முழக்கம்!

தூய்மைப் பணியாளர்கள் மட்டுமின்றி, எலக்ட்ரீசியன், பிளம்பர், குடிநீர் பிரிவு பணியாளர்கள் உள்ளிட்ட பிரிவுகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களும் முழக்கங்களை த.வெ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.